சிறுவர்

அரும்பு

19.04.99

எண்ணம் 10 கிண்ணம் 4

சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் -புவி
பேணி வளர்த்திடும் ஈசன்,
மண்ணுக்குள்ளே சில மூடர் -நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்-
-மகாகவி.சுப்பிரமணியபாரதி-

அன்புச் சிறுவர் சிறுமியரே!

19.4.99 ஆசிரியரின் ஐந்தாவது ஞாபகார்த்த தினமாகும். அதனால் அந்த மாத இதழையும் ஆசிரியருக்கே அர்ப்பணம் செய்கிறோம். ஆசிரியர் மறைவுக்குப் பின்னரும், அவரால் தொடக்கி விடப்பட்ட "சிறுவர் அமுதம்" அன்னாரின் மறைவுக்குப் பின்னரும் நிலையாக நிற்கின்றதாயின், அது அன்னாரது ஆத்மபலம் என்று தான் சொல்ல வேண்டும். அவரது ஆத்மாவின் ஆசி அதற்கு இருப்பதால் தான், தடங்கல்கள், இடர்பாடுகளுக்கிடையேயும் தொடர்ந்து வெளி வருகின்றது.

தொடக்க காலத்தில் அதிக அளவு பக்கங்களுடன் சஞ்சிகை வெளிவந்தது. இப்போது அவ்வாறு வெளியிட முடியவில்லை. விலைவாசி ஏற்றமும், உதவி செய்து வந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி குறைக்கப்பட்டு விட்டதும் அதற்குக் காரணமாகும். ஆனாலும் உலகளாவிய தொண்டாற்றி வரும் இந் நிறுவனம் தொடர்ந்தும்

தன் உதவியை வழங்கி வருவதால் சஞ்சிகை தொடர்ந்து வெளி வருகின்றது. அது மட்டுமல்லாமல் ஆக்கங்கள், போட்டிகள் எழுதிப் பங்கு பற்றி வரும் நீங்களும் இதன் வளர்ச்சியில் முக்கிய பங்கை வகிக்கிறீர்கள்.

தொடக்க கால ஆசிரியரை நினைவு கூர்ந்து, தத்தமது பத்திரிகைகளில் வெளியிட்ட (மண் - ஆசிரியர் திரு. சிவராஜா), (ஈழம்- ஆசிரியர் திரு. இராஜகருணா) ஆகியோருக்கு சிறுவர் அமுதம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிரியை-

சின்னத் திருட்டுகள்

சண்முகம் வங்கி ஒன்றில் குமாஸ்தாவாக இருந்தார். வசதியான வாழ்க்கை. மனைவியான மங்களம் சில காலமாக வேலைக்காரி பொன்னம்மாவைக் கண்காணித்து வருகிறாள். வீட்டில் சில காலமாகச் சின்னச் சின்னத் திருட்டுக்கள் நடக்கின்றன. வீட்டில் இரு மகன்களையும், சண்முகத்தையும், மங்களத்தையும் தவிர யாருமில்லை.

வெளியாளாக வேலைக்காரி பொன்னம்மா தான். அவளும் வீட்டோடு இருப்பதில்லை. காலையில் வந்து மாலையில் தன் வீட்டுக்குச் சென்று விடுவாள். அதனால் தான் பொன்னம்மாவின் மேல் சந்தேகம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனாலும் அவள் எதுவும் எடுத்துச் செல்வதாகத் தெரியவில்லை. மகன்களான ஆனந்தன், கண்ணன் இருவரும் படிக்கும் சிறுவர்கள். அவர்கள் எடுத்திருக்க நியாயமில்லை.

ஒருநாள் பொன்னம்மா வேலைக்கு வரவில்லை. தன் மகனுக்குக் காய்ச்சலாக இருக்கிறதென்று சொல்லிச் சென்று விட்டாள். பிள்ளைகளைக் கல்லூரிக்கு அனுப்பி விட்டு மதிய உணவு தயாரிப்பதில் மங்களம் ஈடுபட்டிருந்தாள். சண்முகமும் அன்று வேலைக்குப் போகவில்லை. திடீரெனப் பொன்னம்மா வந்தாள்.

"அம்மா, காய்ச்சலோடு இருக்கும் மகனை விட்டு வர மனமில்லை. கண்ணால் கண்டதை உடனே சொல்லி விட வேண்டும். ஆனந்தன் தம்பி இன்று பள்ளிக்குப் போகவில்லையா? கடைத்தெருவில் கண்டேனே!" என்றாள். "இல்லை, பள்ளிக்கூடத்துக்குத் தான் சென்றான். நீ வேறு யாரையோ சொல்கிறாய்!" என்றாள் மங்களம்.

பொன்னம்மா சண்முகத்தைப் பார்த்து, "ஐயா, சிறு வயது முதலே இந்த வீட்டில் வேலை செய்தவள்



நான். தம்பிமார் இருவரையும் என் வயிற்றில் பிறந்த பிள்ளைகளாகத் தான் காணுகின்றேன். ஆனந்தன் தம்பி பள்ளிக்கூடத்துக்கு ஒழுங்காகச் செல்வதாகத் தெரியவில்லை. அவருடைய தோழர்களும் நல்லவர்கள் இல்லை. இன்று அவர்களை நான் சூதாட்டக்கடையில் கண்டேன். என்னால் அதைத் தாங்க முடியவில்லை." என்று சொல்லிக் கண்ணீர் விட்டு அழுதாள்.

பெற்றோர் இருவரும் திகைத்து நின்றனர். மங்களத்திற்கு சின்னத் திருட்டுகள் செய்வது தன் மகன் தான் என்று தெரிந்தது. விசுவாசியான பொன்னம்மாவைத் தான் சந்தேகம் கொண்டதை நினைத்து மனதில் வருத்தமும் கொண்டாள்.

நாம் போற்றி மதிக்கும் விஷயங்கள் வேறு. நாம் செய்யும் காரியங்கள் வேறு என்று இருக்கும் வரையில் நமக்குச் சுகம் கிடையாது.

-.'.ப்ரெயா-

ஆசை

மணி ஒரு ரீ.வி வாங்கித் தரும்படி அப்பாவிடம் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அப்பாவுக்கும் ஆசை தான். அதற்காக அப்பா பல அதிஷ்டச்சீட்டுக்களை எடுத்தார். இப்பொழுதும் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறார். ஆனால் எதுவுமே இதுவரை கிடைத்ததாக இல்லை. மணியின் பெயரில் சிறு சீட்டுக்காரரிடம் சீட்டுப் போட்டார். அவர்தான் என்ன செய்வார், பாவம்! தபால்காரராகக் கடமையாற்றும் அவரிடம் ரி.வி வாங்குவதற்கு மொத்தமாகப் பணம் எங்கிருந்து கிடைக்கும்.

மணியும் அதிஷ்டக் குலுக்கல் சீட்டுக்களில் இருந்தாவது ரி.வி வரும் அதிஷ்டம் கிடைக்காதா? என்று பார்த்துப் பார்த்து ஏமாந்து விட்டான். அவனுக்கு அப்பாவிடம் கோபம் கோபமாக வந்தது. அப்பா அவனிடம் "உனக்காகத் தானே சீட்டுப் போட்டு வருகிறேன். அந்தப் பணத்தை நான் வேறெதுக்கும் பயன்படுத்தப் போவதில்லை." என்று சமாதானப் படுத்தினார். உள்ளூர வேதனையாகத் தான் இருந்தது. தவமிருந்து பெற்றெடுத்த

செல்லப்பிள்ளை. படிப்பிலும் சுட்டியாகத்தான் இருந்தான்.

ஒருநாட்காலை மணி பள்ளிக்கூடத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தான். அப்பாவும் வேலைக்குப் புறப்படத் தயாரானார். வாசலில் சீட்டுக்காரர் வந்தார். ஆச்சரியத்துடன் சீட்டுக்காரரைப் பார்த்தார் அப்பா. இம்முறை சீட்டு உங்களுக்குத்தான் கிடைத்துள்ளது. அந்தப் பணத்தைக் கொடுக்கத்தான் வந்தேன்." என்று சொல்லிக் கொண்டே வந்தார். அப்பாவுக்கும் மணிக்கும் சந்தோஷம் தாளவில்லை. இரண்டு கைகளாலும் சீட்டுப்பணத்தைப் பெற்றுக் கொண்டார். வேலை முடிந்ததும் அப்படியே ரி.வி கடைக்குப் போக வேண்டியது தான் என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டார்.

அதேவேளையில் ஒரு இளைஞனும் அவரைத் தேடி வந்தான். "மணி என்பது யார்?, அதிஷ்ட லாபச் சீட்டிளுப்பில் உங்களுக்கு முதற்பரிசாக ரி.வி கிடைத்திருக்கின்றது." என்று சொல்லிக் கொண்டு வந்தான். மணி நடப்பது உண்மைதானா? என்று வியப்புடன் பார்த்தான். அப்பா திகைப்புடனும், ஆச்சரியத்துடனும் பேசாமல் நின்றார். வந்தவர்கள் சென்றதும் மகனைப் பார்த்து, "மணி, சீட்டில் கிடைத்த பணத்தை உன் பெயரில் வங்கியில் போட்டு விடுகின்றேன். நீ மேற்படிப்புக்குச் செல்லும் வேளையில் அந்தப் பணம் உதவும்." என்று சொல்லியவாறே மகனைத் தழுவிக் கொண்டார்.

சொற்களைக் கண்டு பிடியுங்கள்

மா	சி	ல	ந்	தி	கை	ப்	பு	ய	ம்
டி	ப	தி	தா	ண்	ர	அ	ரி	ப	ல
பி	ப்	ச	மா	மை	ய	ல்	ந	னை	க
யா	ஐ	வி	ண்	ர	ச	க	ய	யா	ளி
தி	ய	ப்	த	ட்	டை	ந	ம்	ன	தா
யா	ம்	பு	ப்	கை	கூ	த்	து	த்	ம
ண்	டை	ட்	ம	ட்	ட	ம்	தி	ஆ	ரை
டி	ஆ	வ	ல்	பு	ம்	ய	வி	ர	தி
ட்	தி	னை	க	னை	அ	ப	கை	ணி	க
செ	டி	ட்	பு	ள்	ளி	அ	தி	கா	ரி

பிடித்திருந்தது
1.6.99

நோய் தீர்க்கும் மருந்து

"மருத்துவத்தின் தேவதை" என்று மருத்துவத்துறையினரால் அழைக்கப்படும் "கிளாடியஸ் கேலன்" ரோமன் நாட்டினர் என்று கொள்ளப்பட்டாலும், இவர் பிறந்தது பெர்காமம் (PERGAMUM) என்ற இடம் கிரேக்க தேசத்திலேயே இருந்தது. கி.பி. 133இல் ரோம சாம்ராச்சியத்துடன் இணைக்கப் பட்டது.பெர்காமமில் கேலன் தத்துவமும், மருத்துவமும் கற்றுக் கொண்டார். பிறகு ஸ்மிர்னா (SMYRNA), அலெக்ஸ்சாந்திரியா (ALEXANDRIA) போன்ற இடங்களிலும் தன் கல்வியைத் தொடர்ந்தார்.

சிறந்த மருத்துவராக இருந்த கேலனிடம் சிகிச்சை பெறப் பலர் விரும்பினார்கள். இவரது புகழ் ரோம

சாம்ராச்சியம் வரை பரவியிருந்தது. 169ஆம் ஆண்டிலிருந்து கேலன் தலைநகரான ரோமாபுரியிலேயே வாழ்ந்து வந்தார். மனித உடம்பின் உடற்கூறுகளையும், அமைப்பையும் நன்கறிந்த கேலன், மூளையின் நரம்புகளையும், அதன் செயல்பாட்டையும் மருத்துவத்துறைக்கு வெளிப்படுத்தியவர் ஆவார்.

இவர் கண்டு பிடிப்புக்களில் சில தவறுகள் இருந்தபோதிலும், நோய்களுக்கான சிகிச்சை முறையில், விஞ்ஞான முறையைக் கொண்டு வந்தவர் கேலன் தான். இரத்தம், கபம், பித்தம், கணையம் இவை நான்கும் சமமான தன்மையில் இருக்குமானால் ஒருவன் ஆரோக்கியமாக இருக்கிறான் என்று அர்த்தம். இதில் ஒரு பொருள் கூடியிருந்தாலும் அவன் நோயாளியாவான் என்பது கேலனின் கண்டு பிடிப்பாகும்.

இதுவே ஹிப்போகிரேட்ஸின் முடிவாக இருந்தபோதிலும், கேலன் இவற்றிற்கெல்லாம் விஞ்ஞானரீதியில் சிகிச்சையில் ஈடுபட்டார். இவர் எழுதிய மருத்துவ நூலாகிய "மருத்துவக்கலை" 16ம் நூற்றாண்டில் மருத்துவ மாணவர்கள் பயிலும் நூலாகப் பயன் பட்டது. அவர் வாழ்ந்த காலத்தில் அவர் கண்டறிந்த மருத்துவ சிகிச்சை முறைகள் நவீன சிகிச்சை முறைகள் (MODERN) எனப் மருத்துவத்துறையால் வர்ணிக்கப் பட்டது. தனது 28ஆவது வயதிலிருந்து சிறந்த மருத்துவர் எனப்பெயர் பெற்ற கிளாடியஸ் கேலன் கி.பி.201இல் மறைந்தார்.

-தொடரும்-

பலசாலியும் அறிஞரும்

சீனநாட்டில் ஒரு பலசாலி இருந்தான். அவனுக்குத் தன்னை விட வல்லமை பெற்றவர்கள் யாரும் இல்லை என்னும் அகங்காரம் இருந்தது. அவன் ஒருதரம் தனது நகரத்தில் அறிஞர் ஒருவரைச் சந்தித்தான். அவரிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டு உரையாடினான். அவரிடம் தன்னைப் பற்றித் தானே பெருமை கொண்டு பேசினான்.

தான் சீனநாட்டிலேயே பெரிய பலசாலி என்றும், தன்னை வெல்வதற்கு யாராலும் முடியாதென்றும் புகழ்ந்து கொண்டான். "நான் இந்த நகரத்தின் மத்தியிலிருந்து ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கி

வீசினால், நகரத்தின் எல்லையில் அது போய் விழும்." என்று தற்பெருமைப் பட்டான். அறிஞரும் அவன் சொல்லவதைப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார்.

பின்பு அவனிடம் "அதை நான் பார்க்க வேண்டுமே!. என்றார். அதற்கு அவனும் உடன்பட்டான். அங்கிருந்த பாறாங்கல்லைத் தூக்கினான். அறிஞர் அவனைத் தடுத்தார். பின் அவனிடம் ஒரு சிறிய துணியைக் கொடுத்து, "இதை வீசு. பார்க்கலாம்." என்றார். பலசாலியும் அந்தத்துணியை வேகத்துடன் வீசினான். துணி சிறிது தூரத்திலேயே விழுந்து விட்டது.

அறிஞர் அந்தத்துணியை எடுத்து அதற்குள் கல்லொன்றை வைத்துத் சுருட்டிக் கொடுத்து அதனை எறியும்படி சொன்னார். பலசாலியும் அதை வாங்கி வீசி எறிந்தான். அது வெகு தூரத்துக்குச் சென்று விழுந்தது. அப்போது அறிஞர் பலசாலியைப் பார்த்து, தம்பி! நான் செய்ததை முன்பே நீயும் செய்திருந்தால் துணி தூரச் சென்று விழுந்திருக்கும் அல்லவா? அதை நீ ஏன் செய்யவில்லை?. உடற்பலத்தோடு நமது அறிவையும் சேர்க்க வேண்டும். அதுவே உண்மையான சக்தி என்றார்.

பலசாலியும் அறிஞர் சொல்வது உண்மை என்று கண்டு கொண்டான்.

மகாபாரதம்

வேத்திரகீயத்தில் பாண்டவர்கள தங்களை மற்றவர்கள் அறியாதவண்ணம் பிராமணர்களைப் போலவே வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் அவர்கள் தங்கியிருந்த வீட்டுப் பெண் அழுது கொண்டிருந்தாள். அப்போது ஆண்கள் யாரும் வீட்டில் இல்லை. குந்தி அந்தப் பெண்ணிடம் அழுவதற்கான காரணத்தைக் கேட்டாள். அப்போது அந்தப் பெண் "என் விதி! பெற்ற பிள்ளை அதுவும் என் ஒரே மகனை இன்று இழக்கப் போகின்றேனே.!" என்று மேலும் புலம்பினாள்.

குந்தி "அழாதே பெண்ணே, என்ன விஷயம் என்று சொல். என்னால் உதவ முடியுமானால்

உதவுகின்றேன்." என்று அந்தப் பெண்ணைத் தேற்றினாள். குந்திதேவியின் தேற்றுதலால் சோகம் மாறிய பெண் அழுவதற்கான காரணத்தைக் கூறினாள். "அம்மா, எங்களின் நகரத்தின் அப்புறத்தில் காடு ஒன்று இருக்கிறது. அக்காட்டில் பகன் என்று ஒரு அரக்கன் வாழ்கிறான். அவன் செய்த அட்டகாசங்கள் கொஞ்சமல்ல!.

நாட்டுக்குள் வந்து பிள்ளைகள், பெண்கள், அந்தணர்கள், என்ற பேதமில்லாமல் உண்பான். தானிய வகைகள், வேறு உயிரினங்கள் எல்லாம் அவன் வயிற்றுக்குள் சென்று விடும். இதனால் வேத்திரகீயத்தில் மனிதர்களே வாழ முடியாது போய் விடுமோ என்று அஞ்ச வேண்டியிருந்தது. நகரத்தின் பெரியவர்கள் ஒன்றாகச் சேர்ந்து அவனிடம் சென்றார்கள். அவனைப் பணிவுடனும் பயத்துடனும் வணங்கினார்கள்.

தினந்தோறும் நகரத்துள் வந்து அட்டகாசம் செய்ய வேண்டாமென்றும், அவனுக்குத் தேவையானதைச் சொன்னால் அதைத் தாங்கள் செய்து தருவதாகவும் கேட்டுக் கொண்டார்கள். பகன் முதலில் மறுத்த போதும், பின் ஒப்புக்கொண்டான். அதன்படியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஒரு வண்டி உணவு கொடுத்து விட வேண்டும். கொடுத்து விடும் உணவை மட்டுமல்லாமல், கொண்டு செல்லும் மனிதனும், ஓட்டிச் செல்லும் மாடுகளும் திரும்பி வருவதில்லை.

எல்லாவற்றையும் அவனே சாப்பிட்டு விடுவான். அப்படியான ஒப்பந்தத்தின் பின்பே நகரத்தவர் நிம்மதியாக வாழ்கின்றோம். இன்று நாங்கள் உணவு கொடுக்கும்முறை. என் மகளோ என்னிடம் இல்லை. கணவனை அனுப்பினால் நான் விதவையாகி விடுவேன். நான் செல்லலாம் என்றால் என் சிறுவன் அநாதையாகி விடுவான். மூவரில் யாராவது ஒருவர் பகனுக்கு உணவு கொண்டு செல்ல வேண்டும். என் கணவர் உணவைச் சமைப்பதற்காக அரிசி, காய்கறி வாங்கச் சென்றிருக்கிறார்.

நான் என்ன செய்ய முடியும்? சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு மீண்டும் அழத் தொடங்கினாள். குந்தி தேவி அவளைத் தேற்றினாள். "பெண்ணே! உன் ஒருமகனைப் பறி கொடுக்க வேண்டாம். யாரென்று அறியாமலே எங்களுக்கு உன் வீட்டில் வாழ்வதற்கு இடமளித்தீர்கள். உங்களுக்கு வரும் துன்பங்களில் எங்களுக்கும் சமபங்கு இல்லையா?. எனக்கு ஐந்து மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை நான் அனுப்புகின்றேன்." என்று கூறினாள்.

பாண்டவர்கள் தங்கள் கருமங்களை முடித்துவிட்டுத் திரும்பியதும், குந்திதேவி மக்களை ஒன்றாக அழைத்தாள். அவர்களிடம் எல்லா விஷயங்களையும் கூறினாள். பாண்டவருள் வீமன் உணவு கொண்டு செல்வதற்குத் தயாரானான்.

-தொடரும்-

நாட்டார் கதை

முற்காலத்தில் ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்துக்கு நடந்து செல்வார்கள். ஏனெனில் அப்போது போக்குவரத்து வசதி கிடையாது. நண்பர்கள் சிலர் தமது கிராமத்திலிருந்து வேறோர் இடத்துக்குச் சென்றார்கள். கடுமையான வெயில் காரணமாகக் களைத்து விட்டார்கள். தாகத்தைப் போக்க வீடு ஒன்றில் தண்ணீர் கேட்டார்கள்.

அந்த வீட்டுக்காரர் தண்ணீருக்குப் பதிலாகப் பனங்கள்ளைக் கொடுத்தார். கள்ளு அவர்களுக்குச் சுவையாக இருந்தது. "இந்தத் தண்ணீரை எந்தக் கிணற்றிலிருந்து பெற்றீர்கள்?" என்று கேட்டார்கள். பக்கத்தில் இருந்த கிணற்றை வீட்டுக்காரர் காட்டினார். கிணற்றைத் தூக்கிச் செல்ல வந்தவர்கள் திட்டமிட்டார்கள். இருட்டியபின் தடி, கயிறு போன்றவைகளைக் கொண்டு வந்தார்கள். இரவிரவாகக் கிணற்றைத் தூக்க முயற்சி செய்தார்கள். கிணற்றைத் தூக்க முடியுமா? என்ன?

இது இலங்கையில் வழங்கிவரும் நாட்டார் கதைகளில் ஒன்று.

ஔவையும் இடைச்சிறுவனும்

வேனிற் பருவத்திலே- ஒருநாள்
வெய்யில் வேளையிலே
ஞானத்தமிழ்க் கடல் என்று- அறிந்த
நாடு புகழும் ஔவை,

தூரம் மிக நடந்து -களைத்துச்
சோர்ந்து வரும்வழியின்
ஓரத்தில் ஓர் நாவல் -நிழலில்
ஒதுங்கிச் சற்று நின்றார்.

அந்த மரம் மீதோர்- சிறுவன்
ஆநிரை மேய்க்க வந்தோன்,
சிந்தை மகிழ்ந்து நல்ல -கனிகள்

தின்று நிற்றல் கண்டாள்.

"நா வறளுதப்பா! - நாலைந்து
நாவற்கனி பறித்து,
தா"வென வேண்ட -அவனும்,
"தருவேன்" என்று சொல்லி

"சுட்ட கனி வேண்டுமே?- அன்றிச்
சுடாத கனி வேண்டுமோ?
இட்டமுள்ள கனியைப் -பாட்டி நீ
இயம்பெனக்" கேட்டான்.

கூறிய அம்மொழியால் -உள்ளம்
குழப்ப மெய்தியப்பால்
தேறி அவளும், "அப்பா! -சுட்ட
தீங்கனி தா" என்றாள்.

மெத்தப் பழுத்தலைந்து -கறுத்து
வெடித்த கனியாக,
பத்துப் பதினைந்து- ஒன்றாய்ப்
பறித்து மண்ணிலிட்டான்.

ஒட்டிய மண் நீங்கக்- கனியெடுத்
தூதி நிற்கையிலே,
"சுட்ட கனியிதெ"னச்- சிறுவன்
சொல்லி மறைந்து விட்டான்.

மாடு மேய்ப்பவனும்- என்னை

மடக்கி விட்டானென்று
நாடு புகழும் ஔவை- அன்று
நாணித் தலை குனிந்தாள்.

கந்தன் முருகனே- ஔவையின்
கருவம் போக்குதற்கு, இவ்
விந்தை செய்தானென்று -புலவர்
விளம்புகின்றாரம்மா!

-கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை-

பூனை



பூனை ஒரு வீட்டு மிருகம். பூனை ஒரு செல்லப்பிராணி. இதன் உடல் மிருதுவானது. பூனையில் பல இனங்கள் இருக்கின்றன. காட்டில் வாழும் சிங்கம், புலி, சிறுத்தை என்பனவும் பூனை இனத்தவையே.

பூனை எலி பிடிக்கும். பூனை "மியா,மியா" என்று கத்தும். பூனை கண்ணை மூடிக் கொண்டு பாலை விரும்பிக் குடிக்கும். இதற்குக் கூரிய நகங்கள் உண்டு. பூனை மீனை விரும்பி உண்ணும்.

-மகிழினி பரமசிவம்

சார்லி சப்ளின்

11.4.47இல் "மிஸ்யோ வெர்டாக்ஸ்" படம் நியூயோர்க் நகரத்தில் திரையிடப்பட்டது. படம் அறிஞர்களால் வரவேற்கப் பட்டது. ஆனால் பொது மக்களால் தூக்கி எறியப்பட்டதென்றே கூறலாம். தியேட்டரில் பார்வையாளர்கள் செய்த அட்டகாசத்தைப் பார்க்க முடியாமல் சார்லி அவதிப்பட்டார். படத்தில் நகைச்சுவை இல்லாதிருந்ததே அதற்குக் காரணம். பத்திரிகைகள் கூட சார்லியை "அமெரிக்காவின் எதிரி, சார்லி ரஷ்யாவின் தோழர்" என்று முத்திரை குத்தின.

12ஆம் திகதியில் யுனைடெட் ஆட்டிஸ்ட் நிறுவனத்தில் பத்திரிகையாளர் கூட்டம் ஒன்று நடைபெற்றது. படத்துக்கான விளக்கங்களைக் கேட்காமல் ஏதேதோ கேள்விகளைப் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள்.

"உங்களுக்குத் தேசப்பற்று இருக்கிறதா?"

"நீங்கள் அமெரிக்கக் குடியுரிமையை ஏன் பெற்றுக் கொள்ளவில்லை. அதற்கான காரணம் என்ன?"

"நீர் ரஷ்யநாட்டின் உளவாளியா?"
இக்கேள்விக் கணைகள் சார்லிக்கு ஆத்திரத்தை வரவழைத்தன. "எல்லோருமாகச் சேர்ந்து கேட்காமல் ஒவ்வொருவராகக் கேளுங்கள்." என்றார் சார்லி அமைதியாக.

"நீங்கள் ஏன் அமெரிக்கக் குடிமகனாகவில்லை? அதற்கான காரணம் என்ன?"

"நான் உலகத்துக் குடிமகனாகவே வாழ ஆசைப் படுகின்றேன்."

"உலகக் குடிமகன் என்கிறீர்கள். ஆனால் அமெரிக்காவில் இருந்து கொண்டுதானே பணம் சம்பாதிக்கிறீர்கள்."

"இக்கேள்விக்கு ஒரு வார்த்தையில் பதில் சொல்ல முடியாது. விளக்கமாகத் தான் சொல்ல வேண்டும். நான் உலகளவில் வியாபாரம் செய்கிறவன். எனக்குக் கிடைக்கும் வருவாயில் 75 வீதம் வெளிநாடுகளில் இருந்துதான் கிடைக்கின்றது. ஆனால் நூறுசதவீதம் வருமானத்துக்கான வரியை அமெரிக்கா என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுகின்றது."

இப்படிச் சார்லிக்கும் பத்திரிகையாளருக்கும் கடுமையான விவாதம் நடைபெற்றது. "இப்படி ஒருநிலை எனக்குத் தேவைதானா!" என்று சார்லி வேதனைப் பட்டார். அவர் எப்படியான விளக்கங்களைக் கொடுத்தபொதும் அவரை முழுமையான கம்னியூஸ்ட் என்று பத்திரிகைகள் வர்ணித்தன. அமெரிக்காவை விட்டு வெளியேறி விடச் சார்லியின் மனம் விரும்பியது.

-தொடரும்-

மௌன விரதம்

ஓரநாடு என்ற நகரத்துக்கு மதகுரு ஒருவர் வந்தார். அவரைக் காணவும், ஆசி பெறவும் சனங்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். கிழமைகளில் ஒருநாள் குரு மௌன விரதம் இருப்பது வழக்கம்.

அன்று மாலையில் தான் அவர் பேசுவார். இது கூடுதலான சனங்களுக்குத் தெரிந்திருந்ததால் சனங்கள் அன்றையதினம் வருவதில்லை. வழமைக்கு மாறாக மௌனவிரத நேரத்தில் நாலு பெண்கள் குருவின் சன்னதிக்கு வந்தனர்.

அவர்கள் அடுத்த கிராமத்தில் இருந்து வந்ததால், திரும்பிச் செல்ல விரும்பவில்லை. மாலைவரை காத்திருந்து குருவின் ஆசியும் பெற்றுச் செல்ல எண்ணினார்கள். நால்வரும் குரு தங்கியிருந்த குடிசையின் முன் திண்ணையில் அமர்ந்தார்கள். குரு தான் மௌனவிரதம் காக்கிறார். பெண்கள் எவ்வளவு நேரம்தான் மௌனமாக இருக்க முடியும்!. நால்வரும் ஊர்வம்பு பேசத் தலைப்பட்டார்கள். அவர்களின் சிரிப்பும், கும்மாளமும் குருவின் காதுகளுக்குக் கேட்டது.

அவர்களை மௌனமாக இருக்க வைப்பதற்காக, குரு ஒரு உபாயம் செய்தார். அவர்கள் மௌனமாக இருந்தால், குருவின் இன்றைய விரதத்தின் பலன் எல்லாம் மௌனமாக இருப்பவர்களுக்குக் கிடைக்கும்

என்று குருவின் சீடர்கள் வந்து அப்பெண்களிடம் வந்து கூறினார்கள். பின் மௌனமாகப் பெண்கள் இருந்தார்கள். வம்பு பேசிக் கொண்டிருந்த அவர்களால் எவ்வளவு நேரந்தான் மௌனமாக இருக்க முடியும்?

வயதில் மூத்தவளான பெண் மற்ற மூவரையும் பார்த்து, "வீட்டில் சமையல் செய்வதற்கு எண்ணெய் வேண்டும். திரும்பி வரும்போது வாங்கி வருகிறேன் என்று சொல்லியிருந்தேன். மகள் சமையல் எப்படிச் செய்தாளோ?" என்று சொன்னாள். பக்கத்தில் இருந்தவள், "நானுந்தான். பசுவுக்கு வைக்கோல் வாங்கி வருவதாகக் சொன்னேன். இன்று எதுவுமே செய்ய முடியாது போலிருக்கிறது!" என்றாள்.

இதனைக் கேட்ட மூன்றாவது பெண், "சீடர்கள் கூறியதை மறந்து பேசிக் கொள்கிறீர்களே!" என்று அவர்கள் மறந்து போய்ப் பேசுவதை நினைவூட்டினாள். அப்போது நான்காமவள், "மௌனமாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் தான் மறந்தார்கள். நீ கூடத்தான் கதைத்து விட்டாய்?. மொத்தத்தில் குருவின் விரதத்தின் முழுப்பலனும் எனக்குத்தான்." என்றாள்.

அப்போது அருகில் நின்ற சீடர் ஒருவர் அவர்களைப் பார்த்துச் சிரித்தார். பெண்கள் நால்வரும் தங்கள் முட்டாள்தனத்தை எண்ணி வெட்கப்பட்டனர்.

வினாவிடைப்போட்டி

1. ஐக்கிய அமெரிக்காவின் ஒரே ஒரு தீவு இது. எது?

பிலஹரி, அத்திவாரம், வாய்க்கால்.

2. ஐரோப்பாவில் சன நெருக்கம் மிகுந்த நாடு?

பெதும்பை, எல்லோரா, பாபுஜி, அதிசயம், அங்குசம்.

3. அன்னை தெரேசா இந்தத் தொழிலைச் செய்யவே இந்தியாவுக்கு வந்தார். தொழில் எது?

ஆச்சரியம், சிலப்பதிகாரம், அரியணை, ஐயை.

4. சூரிய மண்டலத்தில் வேகமாகச் சுற்றி வரும் கிரகம் எது?

அம்புசம், தற்பெருமை, வன்செயல்.

5. உலகத்திலேயே பெரிய நிலநடுக்கம் 1976இல் ஏற்பட்டது. எந்த நாட்டில் ஏற்பட்டது?

சீர்சிறப்பு, சன்னாசி.

முடிவு திகதி: 1.06.99

ஞானக் குறைவு

நாராயணன் என்ற ஒரு சங்கீத வித்துவான் இருந்தார். படிப்படியாக முன்னேறிப் பிரபலமாகி வந்தார் அவர். அவரிடம் நிறைய மாணவர்கள் சங்கீதம் படிக்க வருவார்கள். மேடைக் கச்சேரிகள் பல செய்து பலரிடம் பாராட்டும் பெற்றிருந்தார். ஒருசமயம் பிரபலமான நாடகத் தயாரிப்பாளர்கள் தங்கள் நாடகத்துக்கான இசைப் பொறுப்பாளராக நாராயணனை நாடி வந்திருந்தார்கள்.

அவர்கள் அவரிடம், "எங்களின் நாடகத்துக்கு இசையமைத்துக் கொடுத்த மகாலிங்கம் இம்முறை சம்பளம் போதவில்லை என்று மறுத்து விட்டார். அதனால் தான் உங்களிடம் வந்தோம்.

உங்களுக்கு அவர் வாங்கிய 3000 ரூபா சன்மானம் தருகின்றோம். எங்கள் நாடகக்குழுவுக்கான இசைப்பொறுப்பை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்." என்று கேட்டார்கள். மகாலிங்கம் சிறந்த இசைமேதை. நாராயணனும் அவரளவு புலமை பெற்றவர்தான்.

அவர் மறுத்து விட்ட இடத்தில் தாம் ஒப்புக் கொள்வது சரியானதென்று நாராயணனுக்குத் தோன்றவில்லை. மௌனமாக இருந்தார். அப்போது அவர்கள் இந்தமுறை மட்டுமல்ல தொடர்ந்து நாடகங்களுக்கான இசைப் பொறுப்பை நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள். மாதாமாதம் 3000 தருகிறோம்." என்றார்கள். அப்போது நாராயணன் "நான் 3500 ரூபா தருவீர்களாயின் ஒத்துக் கொள்கிறேன்." என்றார்.

அப்போது நாடகக்குழுவினர் "இசைச்கடல், சங்கீதஞான மேதையே 3000 ரூபா பெற்றுக் கொண்டார். அவர் பெற்ற தொகையையே உங்களுக்குத் தருகிறோம் என்கிறோம். நீங்கள் மறுக்கிறீர்களே?" என்று சொன்னார்கள். அதற்கு நாராயணன் "அவர் என்னை விடவும் திறமைசாலி. இசையமைக்க சங்கீதஞானமேதை கஷ்டப்பட்டிருக்க மாட்டார். அவரோடு ஒப்பிடும் பொழுது நான் ஞானக்குறைவு. அவர்

கஷ்டப்படாமலே 3000 ரூபா பெற்றாரானால் நான் கஷ்டப்பட்டே இசையமைக்க வேண்டும். நான் 500 ரூபா கூடக் கேட்டால் என்ன தவறு?" என்று சாமர்த்தியமாகக் கேட்டார்.

அவரின் சாமர்த்தியமான பேச்சைக் கேட்டு நாடகக்குழுவினர் திகைத்து நின்றார்கள்.

கிழவியும் அரசனும்

சிறிய நாடான மாளவத்தீவை ஆண்டு கொண்டிருந்த செல்லப்பா ஒருதரம் மான் வேட்டைக்குச் சென்றார். திரும்பி வரும் வழியில்

மழை பெய்ததால், ஒரு குடிசையில் ஒதுங்கிக் கொண்டார். அந்தக் குடிசையில் வயதான கிழவியும் கிழவனும் வாழ்ந்து வந்தார்கள். கிழவி ஈரமான விறகை வைத்துச் சமையல் செய்து கொண்டு இருந்தாள். அதேவேளையில் மிகவும் கஷ்டப் பட்டாலும், பிரபுவான செல்லப்பாவுக்கும் சுடச்சுடத் தேனீர் தயாரித்துக் கொடுத்தாள்.

செல்லப்பா அவர்களோடு பேசியபோது அவர்களுடைய மகன் கோபித்துக் கொண்டு சென்று விட்டதாகவும், மகள் தன் கணவனுடன் வேரூரில் வசிப்பதாகவும், அவளும் அவர்களைக் கவனிக்க முடியாத நிலையில் இருப்பதால், அவர்கள் தனியாகவே வாழ்ந்து வருவதாகவும் கிழவி சொன்னாள். செல்லப்பா தன் வேலையாளிடம் நன்றாகக் காய்ந்த விறகு கொடுத்து விடுவதாகச் சொல்லிச் சென்றான். சொன்னபடியே தன் வேலையாளிடம் நன்றாகக் காய்ந்த விறகுகள் குதிரை வண்டியில் அனுப்பி விட்டான்.

வேலையாளின் புத்தியோ திருட்டுத்தனமாக வேலை செய்தது. விறகைத் தன் வீட்டில் இறக்கிவிட்டுத், தன் வீட்டிலிருந்த ஈரவிறகை வண்டியில் ஏற்றிக் கொண்டு சென்று கிழவியின் குடிசையில் கொட்டி விட்டுச் சென்று விட்டான். செல்லப்பாவோ, கிழவியின் கஷ்டத்தைத் தீர்த்து விட்டதாக மகிழ்ந்தான். மழைக்காலம் முடிந்து

கோடைகாலம் வந்தது. செல்லப்பா மான் வேட்டைக்காகத் திரும்பவும், அந்த வழியே வந்தான்.

வரும்போது கிழவியின் குடிசையைக் கண்டதும், கிழவியையும், கிழவனையும் காண ஆசைப்பட்டான். செல்லப்பாவைக் கண்டதும், கிழத்தம்பதிகள் அன்போடு வரவேற்று உபசரித்தார்கள். தான் கொடுத்தனுப்பிய விறகைப் பற்றிச் செல்லப்பா அறிய விரும்பினான். எனவே, கிழவியைப் பார்த்து, "அம்மா! நான் அனுப்பிய விறகு மழைக்காலத்திற்கு நன்றாக உதவியிருக்குமே!" என்று கேட்டான்.

அதற்குக் கிழவி, "பிரபு! நீங்கள் அனுப்பிய விறகுக்கு உங்கள் இதயத்தைப் போலவே ஈரமாக இருந்தது. அதனால் அந்த விறகு எனக்குப் பயன் தரவில்லை. இப்போ கோடையானதால் காய்ந்து வருகின்றது. இப்போதான் அதனைப் பயன்படுத்துகின்றேன்." என்றாள். செல்லப்பாவுக்கு மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. "அம்மா, நானே நின்றுதான் விறகை உங்களுக்காக வண்டியில் ஏற்றுவித்தேன். நீங்கள் சொல்வது எனக்கு வேதனையாக இருக்கிறது. ஏதோ பிழை நடந்திருக்க வேண்டும்." என்று சொல்லி வேதனைப்பட்டான்.

கிழவிக்கும் செல்லப்பாவின் மனதை தான் சொல்லியது வேதனைப்படுத்தியது புரிந்தது. பிரபு! "புண்ணியத்துக்கு உழுகிற மாட்டைப் பல்லுக்குப் பதம் பார்ப்பது" என்று பழமொழி ஒன்று இருக்கிறது.

அதைப் போல, எங்களைப் பாவம் என்று நினைத்து நீ உதவி செய்தாய். ஏதோ தவறு நடந்து விட்டது. போனால் போகட்டும். விட்டு விடு." என்று சொன்னாள். செல்லப்பாவும் "அப்படித்தான் இருக்க வேண்டும்." என்று சொல்லி விட்டுத் தன் பங்களாவிற்குச் சென்று விட்டான்.

கிழவிக்கு எப்படி ஈரமான விறகு கிடைத்தது என்பதைக் கண்டு பிடிக்க எண்ணினான். தன் வேலையாளைக் கூப்பிட்டு விசாரித்தான். வேலையாளும் தான் செய்த திருட்டை ஒப்புக் கொண்டான். பின் ஒவ்வொரு மழைக்காலத்திற்கும் காய்ந்தவிறகு செல்லப்பாவின் வேலையாள் மூலம் கிழவியின் குடிசைக்குப் போவது வழக்கமாகி விட்டது.

பூச்சி இனத்துக்குள்ளே மிகவும் கூடுதலான காலத்தைக் கொண்டிருப்பது கரப்பான் இனமே. இது உலகில் தோன்றி 35 கோடி வருடமாகின்றது. கரப்பான் நீரோ, உணவோ இல்லாமல் ஒரு மாதமும், நீரை மட்டுமே அருந்திக் கொண்டு இரண்டு மாதமும், உணவை மட்டுமே உண்டு ஐந்து மாதங்களும் இது உயிர் வாழும். இதன் உணவுப் பழக்கத்தினாலேயே இதன் வம்சம் இன்றுவரை வாழ்கிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

அதிஷ்டசாலி

பஞ்சாப் நாட்டை ரஞ்சித்சிங் என்ற அரசர் ஆண்டு வந்தார். கிழவனாகி விட்ட நிலையிலும், சிறந்த இராஜதந்திரியும், ஞானியுமான அவர் நாட்டை நல்ல முறையில் ஆட்சி செய்து வந்தார். அவர் மகனோ சிறந்த வீரனாக விளங்கினார். நாட்டை விஸ்தரித்தலிலும், எல்லைக்காவல் போன்றவற்றிலும் நாட்டைக் காப்பதில் அவர் சிறந்து விளங்கினார்.

ரஞ்சித்சிங்கின் பேரன் சிறந்த அறிவாளியாக விளங்கினான். சிறிய வயதிலேயே பல நூல்களை இயற்றினான். பலமேதைகளால் சிறந்த கவியாகப் பாராட்டப் பட்டான். மூவருமே நாட்டின் கண்களாக

மதிக்கப்பட்டனர். தாத்தா, மகன், பேரன் ஆகிய மூவரும் ஒரு நாள் தங்களின் உல்லாச மாளிகையில் அமர்ந்து ஆனந்தமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அறிஞர் ஒருவர் அங்கு அரசரிடம் பரிசு பெற வந்திருந்தார். அறிஞராக இருந்த போதிலும், அவர் வறுமையினாலே கஷ்டப்பட்டார். அவருடைய அறிவைப் பரிசோதித்துப் பார்க்க மூவரும் எண்ணினார்கள். அரசர் அறிஞரிடம் "அறிஞரே! எங்களில் யார் அதிஷ்டசாலி என்று கூறுங்கள். யாருடைய திறமைகளையும் குறைவாக மதிப்பிட்டு விடக் கூடாது. நீர் சொல்லுவது சரியான மதிப்பீடாயின் உமக்கு இரட்டிப்புச் சன்மானம் கிடைக்கும். அதாவது ஆயிரம் பொன் தரும் இடத்தில் இரண்டாயிரம் பொன் தருகிறேன்." என்றார்

அறிஞருக்கோ பெரிய சங்கடமாக இருந்தது. ஒவ்வொருவருமே தங்கள் தங்கள் துறைகளில் திறமையுள்ளவர்களாக இருந்தார்கள். யாரைச் சொல்வது எப்படிச் சொன்னாலும் யாரோ ஒருவரது திறமை குறைக்கப் பட்டு விடுமே என்று யோசித்தார். பின் தீர்க்கமான முடிவெடுத்தார். அரசரைப் பார்த்து, "அரசே! அந்த அதிஷ்டசாலி உங்கள் மகன்தான்." என்றார்.

அரசரோ விடவில்லை. "ஏன் அப்படிக் கூறுகிறீர்?" என்று கேட்டார். அறிஞர் அவரைப் பார்த்து, "அரசே! உங்கள் மகன் சிறந்த வீரர். இராஜ தந்திரமும், சிறந்த ஞானியுமான உங்களைத் தந்தையாகப் பெற்றிருக்கிறார். சிறிய வயதிலேயே சிறந்த கல்விமான் எனப் போற்றும் மகனைப் பெற்றிருக்கிறார். இதை விட ஒருவனுக்கு உலகில் வேறென்ன புகழ் வேண்டும்." என்று பணிவோடு கூறினார்.

அரசரும் மகிழ்ந்து அறிஞருக்கான பரிசைக் கொடுத்து அனுப்பினார்.

சிறிது படித்தல், நிறையச் சிந்தித்தல்,சிறிது பேசுதல், நிறையக் கேட்டல், இவை அறிஞனாவதற்குச் சிறந்த வழி-

-எபிக்டெட்டஸ்-

வெற்றி மிக்க தோல்விகள் சில இருக்கின்றன. அவை வெற்றிகளை விடச் சிறந்தவை.

-ரோச் பொகால்ட்

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens

உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527